
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1177

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

60

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# தி.மு.கழகம் - சிறுபான்மையினர் உறவு ஆழங்கால்பட்ட பிணைப்பு!

தேர்தல் பிரச்சாரக் களத்தில் எதிர்க்கட்சி முதல், திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதற்காகவே கட்சி தொடங்கியவர்கள் வரை, அனைவரும் மறக்காமல் ‘சிறுபான்மையினர் காவலர்கள்’ போல பேசி கவனம் ஈர்த்தனர். சிறுபான்மையினர் வாக்குகள், இந்த முறை தி.மு.க.வுக்கு இல்லை, தங்களுக்குத்தான் என்று திரும்பத் திரும்பப் பேசி, நிறுவ முயற்சி செய்தனர். ஆனால், மணிப்பூர் பற்றி எரிந்தபோதும், கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களின்போது நாடு முழுவதும் சங் பரிவார்களால் கிறிஸ்தவர்கள் அச்சுறுத்தலுக்கு ஆளானபோதும், திருச்சியைச் சேர்ந்த ஸ்டேன் பாதிரியார் சிறைச்சாலையில் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, இறுதியில் உயிரிழக்க நேர்ந்தபோதும் மௌனம் காத்த இவர்கள், இப்போது *FOREIGN CONTRIBUTION REGULATION ACT (FCRA), 2010*-ஐ தடை செய்து, சிறுபான்மையின கல்வி நிறுவனங்களை முடக்க முயற்சி செய்யும்போதும் ஜனநாயகம் காக்க குரல்கொடுக்கவேயில்லை. தி.மு. கழகம்தான் அவற்றையெல்லாம் கண்டித்தது, கலகக் குரல் எழுப்பியது.

குறிப்பாக, கிறிஸ்துமஸ் விழாக்கள் அமைதி, கருணை மற்றும் சகோதரத்துவத்தைப் போதிப்பவை என்றும், அதைச் சீர்குலைப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொல்லி, தமிழ்நாட்டில் வகுப்புவாத சக்திகளின் விஷமச் செயல்கள் தலைதூக்காத வண்ணம் அமைதியை நிலைநாட்டியது நம் அரசு. “மதத்தின் பெயரால் எவரேனும் உங்கள் உணர்வுகளைத் தூண்டினால் எச்சரிக்கையாக இருங்கள், அவர்களைச் சந்தேகப்படுங்கள், ஒருவரும் உங்களை வஞ்சிக்காதபடி எச்சரிக்கையாக இருங்கள்” என்று கிறிஸ்துமஸ் விழாவிலேயே பேசி விழிப்புணர்வு தந்தார் நம் முதலமைச்சர். ஆனால், வடமாநிலங்களில் பா.ஜ.க.வின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதல்களை வேடிக்கை பார்த்துக்கொண்டே அவர்களோடு கூட்டணி வைத்த கட்சி அ.தி.மு.க.

### தாக்குதலை முறியடிக்கும் கழகம்

அதுமட்டுமல்ல, வெளிநாட்டுப் பங்களிப்பு முறைப்படுத்துதல் மசோதாவை, நாடாளு மன்றத்தில் பா.ஜ.க. அறிமுகப்படுத்திய உடனேயே பிரதமர் மோடிக்கு மிகக் காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பினார் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். ‘இந்த மசோதா கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களையும் தேவாலயங்களை யும், பிற மதச் சிறுபான்மைத் தொண்டு நிறுவனங்களையும் குறிவைத்துத் தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல். ஏற்கெனவே வக்ஃப் வாரிய சட்டத்திருத்தம் மூலம் இஸ்லாமிய சொத்துகளை கபளீகரம் செய்ய முயன்றதைப்போல, தற்போது மற்ற மதச்சிறுபான்மையின அமைப்புகள் வெளிநாடுகளில் இருந்து பெறும் நிதியை முடக்கும் முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இறங்கியுள்ளது. இந்த முயற்சிகளைக் கைவிட்டு, பிரதமர் இந்த தன்னிச்சையான, அநியாயச் சட்டத் திருத்தத்தை முற்றிலுமாகத் திரும்பப்பெறும் நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும்’ என வற்புறுத்தினார்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு இப்படியொரு மசோதா வந்திருக்கிறதே என்று பத்திரிகையாளர்கள் கேட்டால்கூட, அதற்குப் பதில் சொல்லும் துணிச்சல் அவரிடம் இருக்காது.

அதே போல, குடியுரிமைத் திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு, பசு பாதுகாப்பு வன்முறை, உத்தரப்பிரதேசத்தில் முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களை புல்டோசர் கொண்டு இடிக்கும் கொடுஞ்செயல், பாபர் மசூதி தீர்ப்பு, வக்ஃப் சட்டத் திருத்தம், ஹிஜாப் சர்ச்சை, தொழுகையைக் கட்டுப்படுத்த நெருக்கடிகள், உத்தரகாண்ட்டில் பொது சிவில் சட்டம் என பா.ஜ.க. ஆட்சியின் காரணமாக எண்ணிலடங்கா நெருக்கடிகளை இஸ்லாமிய சமூகம் எதிர்கொண்டுள்ளது. இவற்றில் பல



விவகாரங்களில் அ.தி.மு.க. அமைதியாக இருந்தது, இருக்கிறது. குடியுரிமை திருத்தச் சட்டம் போன்ற முக்கிய விவகாரங்களில் பா.ஜ.க.வின் முயற்சிகளுக்கு முழுமையாகத் துணை நிற்கிறது. அதற்குப் பல்வேறு சப்பைக்கட்டுக் காரணங்களையும் சொல்பவர் எடப்பாடி பழனிசாமி.

### வாக்குகளைக் காப்பாற்றிய கழகம்

சரி, இவையெல்லாம் தமிழ்நாட்டை நேரடியாகப் பாதிக்காமல் திராவிட மாடல் அரசு காத்திருக்கிறது என்றாலும்கூட, வாக்காளர் சிறப்புத் தீவிர திருத்தம் முதல் திருப்பரங்குன்றம் சர்ச்சை வரை தமிழ்நாட்டு இஸ்லாமியர்களுக்குத் துரோகம் இழைத்த கட்சி அ.தி.மு.க. என்பதைக் காலம் எந்நாளும் மறக்காது.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, பீகாரில் முதலில் சிறப்புத் தீவிர திருத்தத்தை மேற்கொண்டது தேர்தல் ஆணையம். அப்போதே இது சிறுபான்மை யினரைக் குறிவைக்கும் சதி என்று எச்சரித்தது தி.மு.கழகம். அதன்படியே, பீகாரில் 65 இலட்சம் வாக்குகள் நீக்கப்பட்டன. அவர்களில் பெரும்பாலானோர் சிறுபான்மையினர், புலம்பெயர் தொழி லாளர்களாக இருந்தனர். அடுத்து அசாமில், “எஸ்.ஐ.ஆர். நடைபெறும்போது நான்கு முதல் ஐந்து இலட்சம் ‘மியா முஸ்லிம்கள்’ நீக்கப்படுவார்கள். மியா மக்களைத் துன்பப்படுத்துவதே எனது வேலை” என்று வெளிப்படையாகவே பேசினார், அந்த மாநில பா.ஜ.க. முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா.

ஆகையால், பா.ஜ.க.வின் இந்தத் தகிடுதத்தங்களை நன்கு உணர்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் வாக்குரிமை பறிபோகாமல் தடுத்திட ஆயத்தமானது. அதன்படி, எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையின்போது, எப்படியெல்லாம் வாக்காளர்களின் உரிமை பறிபோகாமல் தடுக்க வேண்டுமென்று, தனது கட்சி பாக முகவர்களுக்குப் பயிற்சி கொடுத்தது கழகம். ஒவ்வொரு பூத் வாரியாக கழகத்தினர் மேற்கொண்ட பணிகளை, நேரடியாகக் கண்காணித்தார் கழகத் தலைவர். இந்தக் கட்சி, அந்தக் கட்சி எனப் பாகுபாடில்லாமல் எந்தக் கட்சியினராக இருந்தாலும் அவர்களின் வாக்குரிமை பறிபோகக் கூடாது எனக் களத்தில் போராடியது திராவிட முன்னேற்றக் கழகம். எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்குப் பிறகு வரைவு வாக்காளர்கள் பட்டியல் வெளியானவுடன் சரியான வாக்காளர்கள் விடுபட்டிருந்தால், அவர்களை வீடு தேடிச்சென்று விண்ணப்பம் கொடுக்க உதவிகள் செய்து, நியாயமான வாக்காளர் பட்டியல் வெளியாக உறுதியோடு பணியாற்றியது கழகம். இந்தப் பணியில், மற்ற மாநிலங்களைப் போல சிறுபான்மையினர் எவரும் விட்டுப்போகாமல் அவர்களின் வாக்குரிமையும் காக்கப்பட்டது.

தி.மு.கழகத்திற்கு ஈடாக, வேறு எந்தக் கட்சியும் வாக்காளர்களை வீடு வீடாகத் தேடிச்சென்று அவர்களின் வாக்குரிமையை நிலைநாட்ட துணைநிற்கவில்லை. அந்த வகையில், அசாமிலும் பீகாரிலும் சிறுபான்மையினர் இழந்த வாக்குரிமையைத் தமிழ்நாட்டில் காத்து நின்ற காவல் அரண் தி.மு.கழகம்தான் என்பதையும், தங்கள் வீடு தேடி வந்தது தி.மு.க. தொண்டன்தான் என்பதையும் சிறுபான்மைச் சமூகம் நினைவில் நீங்காமல் வைத்திருக்கும்.

ஆனால், பா.ஜ.க.வின் அந்த ஆபத்தான சூழ்ச்சியைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக அல்லது பா.ஜ.க.வை எதிர்க்கத் துணிவற்றவர்களாக திருப்பரங்குன்றம் விவகாரத்தில்கூட மக்களின் உணர்வுகளுக்கு எதிராக இருந்ததுடன், தமிழ்நாட்டின் அமைதியை, மத நல்லிணக்கச் சூழலைக் காக்கத் தவறிய எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருந்தது. ஆக, கடந்த ஐந்து ஆண்டுகளில் சிறுபான்மையினருக்கு எதிரான அனைத்து இடர்களின்போதும் துணை நின்றது தி.மு.க.தான் என்பதை, சிறுபான்மைச் சமூகம் மறந்துவிடாது. சமூக நீதி - சமத்துவ நோக்கத்திலான அந்தப் பிணைப்பினை வாய்ச்சொல் வீரர்களின் பசப்பு வார்த்தைகளால் பிரித்துவிட முடியாது. அது, ஆழங்கால் பட்ட பிணைப்பு. அது, தேர்தல்களைத் தாண்டியும் நீடித்து நிற்கக்கூடியது.

...நீளும்

> “திருப்பரங்குன்றம் விவகாரத்தில்கூட மக்களின் உணர்வுகளுக்கு எதிராக இருந்ததுடன், தமிழ்நாட்டின் அமைதியை, மத நல்லிணக்கச் சூழலைக் காக்கத் தவறிய எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருந்தது.”

## முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றால், நம்பிக்கை!

‘இந்தத் தேர்தலில் தி.மு.க. மகத்தான வெற்றியைப் பெறும் என்பதையே களம் உணர்த்துகிறது. அதற்குக் காரணம், நமது முதலமைச்சர் மக்களிடம் அழுத்தமான நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறார். ‘நமக்கென ஒரு முதலமைச்சர் இருக்கிறார், ஒரு அரசாங்கம் இருக்கிறது, எந்தப் பிரச்சினை வந்தாலும் அது பார்த்துக்கொள்ளும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறார்’ எனக் குறிப்பிட்டுள்ளார், அரசியல் விமர்சகர் ப.கலாநிதி.

‘1. அரிட்டாப்பட்டி டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் போராட்டம் உச்சத்தில் இருந்தபோது, ‘இந்த ஸ்டாலின் இருக்கும் வரை அந்தத் திட்டத்தைக் கொண்டுவர விடமாட்டேன்’ என்று சூளுரைத்தார், அப்படியே செய்தார்.

2. திருப்பரங்குன்றம் விவகாரத்தில், மதுரையில் நாம் விரும்பத்தகாத சம்பவங்கள் நடந்துவிடுமோ என்கிற அச்சம் நிலவியபோது, we are not allowing, we’ll face the consequences என ஓர் அதிகாரி சொன்னார். அது, அதிகாரியின் குரலாக அல்லாமல், அரசாங்கத்தின் குரலாகவே ஒலித்தது.

3. ஆளுநர் ரவி நடுவீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டு, ஒவ்வொரு விவகாரத்திலும் பஞ்சாயத்து செய்து, முட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருந்தபோது, அதற்கு எதிராக வலுவான சட்டப் போராட்டத்தை முன்னெடுத்து, அதில் நாட்டுக்கே வழிகாட்டும் வகையில், அடையாளத் தீர்ப்பைப் பெற்று வெற்றிகண்டது தமிழ்நாடு அரசு.

4. தொகுதி மறுவரையறை விவகாரத்தை, ஸ்டாலின் கையாண்ட விதம் சிறப்பானது. ஓராண்டுக்கு முன்பே பாதிக்கப்படும் மாநிலங்களின் முதலமைச்சர்களை அழைத்து, உச்சி மாநாடு போல நடத்தி, விவகாரத்தின் தீவிரத்தையும் எதிர்க்க வேண்டியதன் அவசியத்தையும் வெளிச்சம் போட்டு காட்டினார். கடந்த வாரம் மக்களவையில் மசோதாவாகக் கொண்டுவரப்பட்டபோது, நாமக்கல் நல்லிபாளையத்தில் அதனை எரித்தபோது வெளிப்பட்ட தீயின் வெப்பம், தலைநகரத்தில் உணரப்பட்டது. அதன் பிறகு, மக்களவையில் நடந்ததெல்லாம் வரலாறு.

ஸ்டாலின் தமிழ்நாட்டுக்கு மட்டும் போராடவில்லை, ஒட்டுமொத்த இந்தியாவுக்காகவும் போராடுகிறார்’ என்று பல காரணங்களை அடுக்கியுள்ளார் அவர்.

## ஃப்ளாஷ்பேக்



குணாளன் லாவண்யன்



### நிவாரணப் பணிகளுக்குக் கழகம் நிதி!

2013-ஆம் ஆண்டு, உத்தரகாண்ட்டில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பைத் தொடர்ந்து, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காகத் தி.மு.க. சார்பில், ரூ.25 லட்சம் பிரதமர் நிவாரண நிதிக்கு வழங்கப்பட்டது. தி.மு.க. எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் தங்களின் ஒரு மாதச் சம்பளத்தை நிவாரண நிதியாக வழங்க வேண்டும் என கலைஞர் கேட்டுக்கொண்டார். இந்தத் தொகையை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, அப்போதைய ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணியிடம் வழங்கினார். இதுதொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பின்போது, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களோடு புகைப்படம் எடுக்க, கலைஞரே அழைப்பு விடுத்தபோது எடுத்துக்கொண்ட அரிய படம்.

**– குணாளன் லாவண்யன், பத்திரிகையாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு — நினைவுக

### நிக்சன் விசாரித்த கலைஞர்!

1953-ஆம் ஆண்டு கல்லக்குடிப் போராட்டத்தில், ஜூலை மாதம் கைது செய்யப்பட்ட கலைஞர் உள்ளிட்ட ஐவரும், நவம்பர் மாதம் விடுதலை செய்யப்பட்டனர். நவம்பர் 29-ஆம் தேதி சென்னை வந்த கலைஞருக்கு, சென்னையே திரண்டு வரவேற்பு அளித்தது. அண்ணா சாலையில் கலைஞர் வரவேற்பு ஊர்வலத்தைக் கண்ட ஒரு அமெரிக்கர், ‘இப்படி செல்வாக்கு பெற்ற இந்தத் தலைவர் யார்? என விசாரித்தார்’ அவர்தான் பின்னாளில் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த நிக்சன்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900